**செய்தி வெளியீடு எண் : 1209** **நாள் : 18.07.2022**

# செய்தி வெளியீடு

**மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு.வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (18.07.2022) சென்னை மின்வாரிய தலைமை அலுவலகத்தில் அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் மேற்பார்வை பொறியாளர்கள்/மின் பகிர்மான வட்டம் ஆகியோர்களுடன் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மேற்கொண்ட சிறப்பு பராமரிப்பு பணிகள் மற்றும் திட்டப் பணிகள் குறித்து காணொளி மூலம் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.**

மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் தலைமையில் இன்று (18.07.2022) தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மானக் கழக தலைமை அலுவலத்தில், தலைவர் மற்றும் மேலாண்மை இயக்குநர் திரு.ராஜேஷ் லக்கானி, இ.ஆ.ப., இயக்குநர்/பகிர்மானம், அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மேற்பார்வைப் பொறியாளர்கள் ஆகியோர்களுடன் காணொளி மூலம் ஆய்வுக் கூட்டம் நடைபெற்றது.

இந்த ஆய்வுக் கூட்டத்தில், மாண்புமிகு மின்சாரம், மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத் துறை அமைச்சர் அவர்கள் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தில் மேற்கொண்ட சிறப்பு பராமரிப்பு பணிகள் மற்றும் திட்டப் பணிகள் குறித்து விரிவான ஆய்வினை மேற்கொண்டார்.

இந்த ஆய்வுக் கூட்டத்தில் எதிர்வரும் வடகிழக்கு பருவமழையினை எதிர்கொள்வதற்கும், மழை காலங்களில் சீரான மின் விநியோகம்

வழங்குவதற்கும் கடந்த ஒரு மாத காலமாக தமிழ்நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு பராமரிப்பு பணிகள் குறித்து விரிவான ஆய்வு மேற்கொண்டார். ஏற்கனவே திட்டமிடப்பட்ட 3,37,865 பணிகளை விட கூடுதலாக 6,21,181 பணிகள் என மொத்தம் 9,59,046 பணிகள் இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன.

| | | |
|---|---|---|
| 1. | துணை மின் நிலையங்களில் பராமரிப்பு பணிகள் | 1,845 |
| 2. | மரக்கிளைகள் அகற்றப்பட்டவை | 5,45,269 |
| 3. | பழுதடைந்த மின்கம்பங்கள் மாற்றப்பட்டவை | 30,830 |
| 4. | சாய்ந்த நிலையிலுள்ள மின்கம்பங்களை சரிசெய்தல் | 25,959 |
| 5. | தாழ்வாகச் செல்லும் மின்கம்பிகளை சரிசெய்தல் | 49,567 |
| 6. | புதிய மின்கம்பங்கள் இடைச்செருகல் செய்யப்பட்டவை | 19,444 |
| 7. | மின்கம்ப தாங்கு கம்பிகள் புதுப்பித்தல் | 31,231 |
| 8. | பலவீனமான பழுதடைந்த பீங்கான்கள் மாற்றப்பட்டவை | 86,840 |
| 9. | பழுதடைந்த மின்பெட்டிகள் சரிசெய்தல் | 2,474 |
| 10. | பழைய மின்கம்பிகள் மாற்றுதல் (கி.மீ) | 1,153 |
| 11. | பலவீனமான இணைப்பு கம்பிகளை மாற்றுதல் | 58,317 |
| 12. | AB ஸ்விட்ச் பராமரிப்பு | 31,251 |
| 13. | நில இணைப்பு/கார்டிங் அமைத்தல் | 10,892 |
| 14. | மின்கம்பிகளை தரம் உயர்த்துதல் (கி.மீ) | 1,496 |
| 15. | மின்மாற்றி கட்டமைப்பு (DT Structure) பராமரிப்பு | 45,972 |
| 16. | மின்மாற்றி (DT) பராமரிப்பு | 14,480 |
| 17. | வெளியே தெரியும் மின்வடங்களை புதைத்தல் | 535 |
| 18. | புதிய இரு மின்கம்ப கட்டமைப்பு அமைத்தல் | 273 |
| 19. | மின்பெட்டிகள் பராமரிப்பு (சென்னை மட்டும்) | 1,218 |
| | மொத்தம் | 9,59,046 |

தேவைப்படும் அனைத்து சிறப்பு பராமரிப்பு பணிகளையும் வருகின்ற 30.07.2022–க்குள் முடிக்குமாறு அனைத்து மண்டல தலைமைப் பொறியாளர்கள் மற்றும் அனைத்து மின்பகிர்மான வட்ட மேற்பார்வை

பொறியாளர்கள் அனைவரையும் மாண்புமிகு மின்துறை அமைச்சர் அவர்கள் அறிவுறுத்தினார்.

சென்னை மற்றும் அதனைச் சுற்றியுள்ள புறநகர் பகுதிகளில் நடைபெற்று வரும் மழைநீர் வடிகால் பணிகளின் காரணமாக புதைவடங்களில் ஏற்படும் தற்காலிக பழுதினை உடனடியாக சரிசெய்யுமாறு அறிவுறுத்தப்பட்டது.

பழுதடைந்த மின் அளவிகள் மற்றும் மின்மாற்றிகளை உடனுக்குடன் மாற்றுவதற்கு அதிகாரிகள் அனைவருக்கும் உத்தரவிடப்பட்டது.

தமிழ்நாட்டில் இருக்கக்கூடிய அனைத்து துணை மின் நிலையங்கள், மின்மாற்றிகள் மற்றும் பில்லர் பெட்டிகள் ஆகியன மீது சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தனிக்கவனம் செலுத்தினால் மட்டுமே மின்நுகர்வோரிடமிருந்து வரும் புகார்களை குறைக்க முடியும் என்பதனையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அதிகாரிகளுக்கு உத்தரவிட்டார்.

பொதுமக்களிடமிருந்து மின்தடை சம்பந்தமாகவோ, பாதுகாப்பு சம்பந்தமாகவோ தகவல் கிடைக்கப் பெற்றவுடன் அத்தகவலின் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு அனைத்துப் பொறியாளர்களையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டார். தவறும் பட்சத்தில் உரிய அலுவலர் மீது துறை சார்ந்த நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அமைச்சர் அவர்கள் தெரிவித்தார்.

**பின்னர் மாண்புமிகு மின்துறை அமைச்சர் திரு. வி செந்தில்பாலாஜி அவர்கள் செய்தியாளர்களை சந்தித்து தெரிவித்ததாவது**

கடந்த 2011-12 ஆம் ஆண்டில் ரூ.18,954 கோடியாக இருந்த தமிழ்நாடு மின்உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் ஒட்டு மொத்த நிதி இழப்பானது, கடந்த 10 ஆண்டுகளில், ரூ. 94,312 கோடி மேலும் அதிகரித்து, 31.03.2021 வரை ரூ.1,13,266 கோடியாக உயர்ந்துள்ளது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்தின் நிதி இழப்பினை, 2021-22 ஆம் ஆண்டிலிருந்து 100% முழுமையாக அரசே ஏற்று கொள்ளும் என்ற தற்போதைய தமிழக அரசின் உறுதிப்பாட்டை போல, முந்தைய காலத்தில் எவ்வித உறுதிப்பாடும் வழங்காத காரணத்தினால், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகமானது நிதி நிறுவனங்கள் மற்றும் வங்கிகளிடமிருந்து கடன் வாங்க வேண்டிய கட்டாயத்திற்கு தள்ளப்பட்டது. இதன் விளைவாக, 2011-12ம் ஆண்டில் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மற்றும் மின் தொடரமைப்பு கழகத்திற்கு ரூ.43,493 கோடியாக இருந்த கடன் தொகையானது கடந்த 10 ஆண்டுகளில் 3 மடங்கு அதிகரித்து தற்சமயம் (2021-22) வரை ரூ.1,59,823 கோடியாக உள்ளது. இதன் விளைவாக, கடந்த 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.4,588 கோடியாக இருந்த கடன் வாங்கிய நிதியின் வட்டியானது 259 % அதிகரித்து 2020-2021 ஆம் ஆண்டில் ரூ.16,511 கோடியாக அதிகரித்துள்ளது.

கடந்த 10 ஆண்டுகளில் தொடங்கப்பட்ட பெரும்பாலான மின் திட்டங்கள், அத்திட்டங்களுக்கான உரிய கால அட்டவணைக்குள்முடிக்கப்படாத காரணத்தினால் இத்திட்டங்களின்

மூலதனச் செலவு கடுமையாக அதிகரித்ததுடன் கட்டுமானத்தின் மீதான வட்டி (Interest During Construction) ரூ.12,647 கோடியாக அதிகரித்துள்ளது. சென்ற 10 ஆண்டுகளில், துணை மின் நிலையங்கள் மற்றும் மின் தொடரமைப்பு அமைத்தல் உள்ளிட்ட பல உள்கட்டமைப்புப் பணிகள் நீடித்தும், இது போன்ற திட்டங்களின் நிலைத் தன்மையைக் கருத்தில் கொள்ளாமலும், செலவின பலனின் மீது கவனம் செலுத்தாமல் பகுப்பாய்வு செய்ததின் காரணத்தினாலும் கடன் சுமை கடுமையாக அதிகரித்துள்ளது.

மின் விநியோக காலங்களின் கடன்களை 75% எடுத்துக்கொண்டு, அதன் மூலம் அசல் மற்றும் வட்டியை குறைத்து, நிதிநிலைமையை சீராக்குவதே உதய் திட்டத்தின் முக்கிய நோக்கமாகும். 30.09.2016 அன்று நிலுவையில் உள்ள மொத்த கடன் ரூ.81,300/- கோடியாக இருந்த நிலையில், மின் விநியோக கழகங்களின் கடனில் ரூ.22,815 கோடியை மட்டுமே 2017-18 முதல் 2020-21 ஏற்றுக் கொண்டது. அவ்வாறாக பெறப்பட்ட கடனிற்கான வட்டியை ஈடுசெய்யும் பொருட்டு வீட்டு உபயோக பிரிவிற்கான மானியம் 2017 ஆம் ஆண்டு குறைக்கப்பட்டது. தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் உதய் திட்டத்தில் இணைந்தாலும் தொடர்ந்து இழப்பையே சந்தித்ததுள்ளது. இதன்மூலம், எந்தவிதமான முன்னேற்றமும் ஏற்படவில்லை.

கடந்த 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.16,488 கோடிகளாக இருந்த மின் கொள்முதல் கட்டணம் 2020-2021 ஆம் ஆண்டில் 127 % அதிகரித்து ரூ.37,430 கோடிகளாக உள்ளது. அதேபோல், கடந்த 2011-2012 ஆம் ஆண்டில் ரூ.5,462.8 கோடிகளாக இருந்த எரிபொருள்களுக்கான செலவுத் தொகை 2020-2021 ஆம் ஆண்டில் 21 % அதிகரித்து ரூ.6610

கோடிகளாக அதிகரித்து உள்ளது. கடந்த, 2011–2012 ஆம் ஆண்டில், ரூ.4,125.20 கோடியாக இருந்த பணியாளர்களுக்கான செலவுத் தொகை 2020–2021 ஆம் ஆண்டில் 161 % அதிகரித்து, ரூ.10,777.53 கோடியாக உள்ளது.

ஒன்றிய அரசின் மின் அமைச்சகத்தால் மாநிலத்திற்கு 0.5 % கூடுதல் கடன் வாங்குவதற்கு கட்டணத் திருத்தத்துடன் மின்துறை சீர்திருத்தங்களின் கட்டாய நிபந்தனையை உருவாக்கியுள்ளது. ஒன்றிய அரசின் நிதி நிறுவனங்களான M/s REC மற்றும் M/s PFC சிறப்புப் பணப்புழக்கத் திட்டத்தின் (ஆத்மநிர்பார்) கீழ் ரூபாய் 30,230 கோடி கடனை அனுமதிக்கும்போது, வருடாந்திர கட்டண திருத்தத்தை மேற் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையின் அடிப்படையில் அனுமதித்துள்ளது. கட்டணத்திருத்தம் செய்யப்படாததால், ஆத்மநிர்பார் திட்டத்தின் கீழ் மீதமுள்ள ரூ.3,435 கோடியை REC/PFC நிறுவனங்கள் நிறுத்தி வைத்ததால் மின் உற்பத்தியாளர்களுக்கு தீர்வு காணப்படவில்லை.

ஒன்றிய அரசின் மின் அமைச்சகத்தின் வழி காட்டுதல்களின் படி, விநியோக முறையை வலுப்படுத்தும் (RDSS) திட்டத்தின் கீழ் நிதியை வெளியிடுவதற்காக மின் கட்டணம் திருத்தம் செய்வது முன் நிபந்தனையாகும். அவ்வாறு மின் கட்டணம் திருத்தம் செய்யப்படாவிட்டால் தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு 10,793 கோடி ரூபாய்க்கான மானியங்கள் வழங்கப்படாது மற்றும் அந்த திட்டங்கள் எதுவும் தொடங்கப்படாது. மின் விநியோக நிறுவனங்கள் உட்பட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களுக்கு கடன் வழங்குதற்கான வணிக வங்கிகளுக்கு ரிசர்வ் வங்கி ஒரு கட்டாய

வழிகாட்டுதலை உருவாக்கியுள்ளது, அதன் படி ஒவ்வொரு ஆண்டும் நவம்பர் 30 ஆம் தேதிக்குள் மின் விநியோக நிறுவனங்கள் மின் கட்டண மனுவை தாக்கல் செய்யவேண்டும். CERC/APTEL போன்ற பல சட்ட அமைப்புகள், தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகம் மின் கட்டணம் திருத்தம் செய்யாதது குறித்து அவ்வப் போது கண்டனம் தெரிவித்து வந்தன. மேலும் மின் உற்பத்தி நிறுவனங்கள் மற்றும் பிற பொருள் விநியோகஸ்தர்கள் மற்றும் ஒப்பந்தாரர்களுக்கு நிலுவையில் உள்ள நிலுவைத் தொகையை அதிகரிப்பது குறித்தும் பல முறை குறிப்பிட்டுள்ளன.

ஒன்றிய அரசின் மின் அமைச்சகத்தின் அறிவிக்கையின் படி 10 சதவீதம் வெளிநாட்டு நிலக்கரியை பயன்படுத்துவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. இதனால், மின்சாரத்தின் சராசரி விலை அதிகரித்து மின் வழங்கல் விலை மற்றும் சராசரி வருவாய்த் தேவைக்கான இடைவெளி அதிகரித்துள்ளது. மேலும், கடந்த 10 ஆண்டுகளாக தமிழ்நாடு மின் மிகை மாநிலம் என அறிவித்த போதிலும், மூன்றில் இரண்டு பங்கு மின்சாரம் அதிக விலைக்கு கடந்த காலத்தில் கொள்முதல் செய்யப்பட்டது.

**எனவே, தமிழ்நாடு மின் உற்பத்தி மற்றும் பகிர்மான கழகத்திற்கு மின் கட்டணத்தை 8 வருட இடைவெளிக்குப் பிறகு உயர்த்துவதைத் தவிர வேறு வழியில்லை.**

## புதிய மின் கட்டணம் – முக்கிய அம்சங்கள்

### தாழ்வழுத்த மின் கட்டணம்

1. தமிழ்நாட்டில் உள்ள 2.37 கோடி வீடு மற்றும் குடிசை மின் நுகர்வோரில், ஒரு கோடி நுகர்வோர்களுக்கு (42.19 சதவீதம்) மின் கட்டண உயர்வு எதுவும் இல்லை.
2. அனைத்து வீட்டு மின்நுகர்வோர்களுக்கும் 100 யூனிட் வரை விலையில்லா மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும் மற்றும் குடிசை இணைப்புகளுக்கும் தொடர்ந்து இலவச மின்சாரம் வழங்கப்படும்.
3. வீட்டு மின்நுகர்வோர்களுக்கு தேர்தல் வாக்குறுதி எண்.222–ன் படி, நிலைக்கட்டணம் இருமாதங்களுக்கு ரூ.20 முதல் ரூ.50 வரை செலுத்துவதில் இருந்து முழு விலக்கு அளிக்கப்படுகிறது. இதனால் 2.37 கோடி வீட்டு மின்நுகர்வோர்கள் பயன் அடைவர்.
4. தற்பொழுது குடிசை, விவசாயம், கைத்தறி, விசைத்தறி மற்றும் வழிப்பாட்டுதலங்கள் முதலிய மின் கட்டண பிரிவிற்கு வழங்கப்பட்டு வரும் மின்சார மானியம் தொடர்ந்து வழங்கப்படும்.
5. இரு மாதங்களுக்கு மொத்தம் 200 யூனிட் வரை பயன்படுத்தும் 63.35 இலட்சம் வீட்டு மின்நுகர்வோர்களுக்கு (26.73 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.27.50 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
6. இரு மாதங்களுக்கு மொத்தம் 300 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 36.25 இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு (15.30 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.72.50 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
7. இரு மாதங்களுக்கு மொத்தம் 400 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 18.82 இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு (7.94

சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.147.50 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

8. இரு மாதங்களுக்கு மொத்தம் 500 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 10.56 இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு (4.46 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.297.50 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
9. இரு மாதங்களுக்கு மொத்தம் 600 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 3.14 இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு (1.32 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.155 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
10. இரு மாதங்களுக்கு மொத்தம் 700 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 1.96 இலட்சம் வீட்டுமின் நுகர்வோர்களுக்கு (0.83 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.275 மட்டும் உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
11. இரு மாதங்களுக்கு மொத்தம் 800 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 1.26 இலட்சம் வீட்டு மின்நுகர்வோர்களுக்கு (0.53 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.395 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
12. இரு மாதங்களுக்கு மொத்தம் 900 யூனிட்டுகள் வரை மின் நுகர்வு செய்யும் 0.84 இலட்சம் வீட்டு மின் நுகர்வோர்களுக்கு (0.35 சதவீதம்) மாதம் ஒன்றிற்கு ரூ.565 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13. <u>வீட்டு மின் உபயோகம்</u>

தற்பொழுது, வீட்டு உபயோகத்திற்கு பயன்படுத்தும் மின்சாரத்தில் 500 யூனிட்டுகள் வரை பயன்படுத்தும் நுகர்வோர்களுக்கு மின் கட்டணமாக மொத்தம் ரூ.1,130 வசூலிக்கப்பட்டு வருகிறது. ஆனால்,

மின் நுகர்வு 500 யூனிட்டிலிருந்து, 501 யூனிட்டுகளாக அதிகரிக்கும் பொழுது அதற்கான மின் கட்டணத் தொகையானது 58.10 % அதிகரித்து மொத்தம் ரூ.1,786 ஆக வசூலிக்கப்பட்டு வருகிறது. 500 யூனிட்டுகளுக்கு மேல், ஒரு யூனிட் கூடுதலாக பயன்படுத்தினாலும் மின் நுகர்வோர் கூடுதலாக ரூ.656.60 செலுத்தி வருகின்றனர். இந்த வேறுபாடுகள் முற்றிலும் களையப்பட்டு ஒரே மின் கட்டணமாக மாற்றி அமைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

14. **ஊரகம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் இயங்கி வரும் நூலகங்களுக்கான மின் கட்டணம்,**

தற்பொழுது ஊரகம் மற்றும் கிராமப்புற பகுதிகளில் இயங்கி வரும் நூலகங்களுக்கான மின் கட்டணம் யூனிட் ஒன்றிற்கு ரூ.5.75 ஆகவும், நிலைக் கட்டணமாக மாதம் ஒன்றிற்கு ரூ.60 ஆகவும் கணக்கீடு செய்யப்பட்டு வருகிறது. பொதுமக்களிடம் படிக்கும் திறனை மேம்படுத்தும் விதமாக வணிக ரீதியில் இயங்காத நூலகங்களுக்கான மின் கட்டணத்தினை மானியம் இல்லா வீட்டு விகிதப்பட்டியலில் கணக்கீடு அதாவது 30 % குறைப்பதற்கு வழிவகை செய்யப்பட்டுள்ளது.

**<u>பிற தாழ்வழுத்த மின் கட்டணம்</u>**

15. 93% (2.26 இலட்சம்) சிறு மற்றும் குறுந்தொழில் மின் நுகர்வோர்களுக்கு, குறைந்த அளவாக யூனிட் ஒன்றிற்கு 50 காசுகள் மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

16. 53% (19.28 இலட்சம்) வணிக மின் நுகர்வோர்களுக்கு மாதம் ரூ.50 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
17. தனியார் கல்வி நிறுவனங்களுக்கு யூனிட் ஒன்றிற்கு சிறிய தொகையாக ரூ.1 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
18. விசைத்தறி நுகர்வோர்களுக்கு 750 யூனிட் வரை இலவச மின்சாரம் தொடர்ந்து வழங்கப்படும். அதற்கு மேல், யூனிட் ஒன்றிற்கு 70 பைசா மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
19. கடந்த 8 ஆண்டுகளுக்கு பிறகு, தாழ்வழுத்த தொழிற்சாலைகளுக்கு (LT), குறைந்த அளவில், யூனிட் ஒன்றிற்கு ரூ.1.15 மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

<u>**உயர் மின்னழுத்தத்திற்கான மின் கட்டணம்**</u>

1. உயர் மின்னழுத்த தொழிற்சாலைகளுக்கான மின் கட்டணத்தில், யூனிட் ஒன்றிற்கு 40 காசுகள் மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. இரயில்வே மற்றும் அரசு கல்வி நிறுவனங்களுக்கான மின் கட்டணம், யூனிட் ஒன்றிற்கு 65 காசுகள் மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. உயரழுத்த வணிகப் பிரிவு நுகர்வோர்களுக்கான, மின் கட்டணமானது யூனிட் ஒன்றிற்கு குறைந்த அளவாக 50 காசுகள் மட்டுமே உயர்த்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

## <u>பிற உத்தேசிக்கப்பட்டுள்ள மாற்றங்கள்</u>

1. **<u>மின் மானியத்தை தாமாக விட்டுக் கொடுக்கும் திட்டம்:</u>** 100 யூனிட் இலவச மின்சாரம் மற்றும் குறைக்கப்பட்ட மின்சாரத்திற்குரிய மின் மானியத்தை நுகர்வோர் விரும்பும் பட்சத்தில் **"மின்மானியத்தை தாமாக விட்டுக் கொடுக்கும்"** திட்டம் மூலம் அமல்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.
2. **<u>மின் வாகனங்களுக்கான சலுகை:</u>** வீட்டு நுகர்வோர்கள் தங்கள் மின் வாகனத்தை தங்கள் வீட்டிலேயே அதே விகிதப் பட்டியலில் மின்னேற்றம் (charging) செய்து கொள்வதற்கும், அதேபோல், வணிக நுகர்வோர்கள் அதே விகிதப் பட்டியலில் பொது மின்னேற்றம் (charging) செய்வதற்கும் உத்தேசிக்கப்பட்டுள்ளது.
3. **<u>பசுமைக் கட்டண அறிமுகம்:</u>** புதுப்பிக்கத்தக்க எரிசக்தியை ஊக்குவிப்பதற்காக RE சான்றிதழுடன் RE மின் சக்தியை வழங்குவதற்காக பசுமைக் கட்டணம் அறிமுகப்படுத்தப்படுகிறது.
4. **<u>பொது வழங்கல்:</u>** வீட்டு உபயோகத்திற்கான மின் மானியத்தை, பல முறை பெறுவதைத் தடுக்க பொது மின் இணைப்புக்கான விளக்குகள், மின் தூக்கி, நீர் வழங்கல் போன்ற அமைப்புகளுக்கு (Common Service) தனியாக விகிதப் பட்டியல் I (D) உருவாக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
5. உடற்பயிற்சிக் கூடம், நீச்சல்குளம், கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம், நீர்சுத்திகரிப்பு நிலையம் மற்றும் தீ அணைப்பு கருவிகள் போன்ற அமைப்புகளுக்கு வணிகப் பிரிவில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டு விகிதப்பட்டியல் I (D) (Common Service) ஆக மாற்றுவதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது.

6. **<u>ஆலோசனை அறை:</u>** மருத்துரவர்கள் / பொறியாளர்கள் / உள்அமைப்பு அலங்கரிப்பாளர் / கணக்காயர் / வழக்கறிஞர் போன்ற தொழிலாற்றுநர்கள் தங்கள் தொழில்முறை வேலைக்கு தங்கள் வீட்டில் 200 சதுர அடி வரை பயன்படுத்தலாம்.
7. **<u>இணைய வழி மின் கட்டணம்:</u>** வீட்டு உபயோகிப்பாளர்கள் ரூ.2,000–க்கு மேற்பட்ட மின்கட்டணத்தை இணைய வழி மூலம் கட்டாயமாக செலுத்த வேண்டும்.
8. **<u>ஒரு வீட்டிற்கு ஒரு இணைப்பு:</u>** ஒரு வீட்டில் கூடுதலாக வாடகை / குத்தகைக்கு விடப்பட்டதைத் தவிர மற்ற கூடுதல் மின் இணைப்பிற்கு மாதம் ஒன்றிற்கு ரூ.225 வசூலிக்கப்படும்.
9. உள்ளாட்சி அமைப்புகளால் பராமரிக்கப்படும் பூங்காக்கள் மற்றும் நீச்சல் குளங்களுக்கான வணிக விகிதப் பட்டியலில் இருந்து உள்ளாட்சி அமைப்புகளின் கட்டண விகிதத்தின் கீழ் மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.
10. மின்மயானம், அங்கன்வாடிமையங்கள், பொதுவசதிகள், ஒருங்கிணைந்த மகளிர் சுகாதார வளாகங்கள், சத்துணவு மையங்கள் ஆகியவற்றை வீட்டு விகிதப் பட்டியலில் இருந்து உள்ளாட்சி அமைப்புகளின் கட்டண விகிதத்தின் கீழ் மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.
11. தரவு மையங்களை (Data Centre) தொழிற்சாலைகளுக்கான மின் விகிதப் பட்டியலில் சேர்க்க உத்தேசிக்கப்பட்டுள்ளது.
12. நாளின் நேர மின்கட்டண விகிதம் (ToD) : உச்ச நுகர்வு நேரங்கள் காலை 6.30 மணி முதல் 10.30 மணி வரை, மாலை 6.00

மணி முதல் இரவு 10.00 மணி வரை என மாற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளது.

13. திருமண மண்டபங்கள் / அவைகூட்டுகை மையங்கள் அபரிதமான வெளிச்சம் பயன்பாட்டிற்கு தனியாக தற்காலிக மின் விகித பட்டியலில் மின் இணைப்பு பெறாமல் அதே மின் இணைப்பில் 5% கூடுதல் கட்டணத்துடன் பயன்படுத்த உத்தேசிக்கப்பட்டுள்ளது.

14. இந்த திருத்தியமைக்கப்பட்ட மின் கட்டணத்தினை அமல்படுத்துவதற்கு உரிய மனு மாண்பமை தமிழ்நாடு மின்சார ஒழுங்குமுறை ஆணையத்திடம் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**

அரசின் செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள :

tndiprnews tndipr tndipr TN DIPR www.dipr.tn.gov.in